# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்
## அசல் வழக்கு எண். 30/2022
## நாள்: 22.07.2026

**பெயர் : மாலதி**
**கணவர் பெயர்: ரங்கசாமி**
**DW: 2**
**(சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டது)**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நானும் என் கணவரும் ஒரே வீட்டில் சுமுகமாக உறவில் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வ.சா.ஆ.1/கிரய உடன்படுக்கையில் உள்ள கையொப்பம் என் கணவருடையது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வ.சா.ஆ.6 நான் கொடுத்த பதில் அறிவிப்பு என்றால் சரிதான். அதில் என் கணவர் மது போதையில் இருந்தபோது அதை சாதகமாக பயன்படுத்தி கொண்டு என் கணவரின் கையொப்பம் பெற்று கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி இருக்கலாம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.
2. வ.சா.ஆ.4 வாதி கொடுத்த அறிவிப்பு என்றால் சரிதான். வ.சா.ஆ.5 திருப்பப்பட்ட அஞ்சல் முறையில் உள்ள பெறுநர் முகவரி என்னுடையது என்றால் சரிதான். அறிவிப்பு வந்த பிறகு கிரய உடன்படுக்கை நிறைவேற்றாமல் பெயரளவில் செட்டில்மேன்ட் ஆவணம் என் பெயரில் ஏற்படுத்தி கொண்டு எனக்கு வந்த அறிவிப்பை வாங்க மறுத்து விட்டேன் என்றால் சரியல்ல. வ.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டு விட்டு தற்போது பொய்யாக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் வாதிக்கு கொடுத்த கிரய ஒப்பந்தம் எனக்கு தெரியும் என்றும், அது தெரிந்தே மோசடியாக செட்டில்மேன்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும் என் கணவரும் சேர்ந்து வாதி கேட்டுள்ள பரிகாரம் கொடுக்க

கடமை பட்டவர்கள் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. என்னிடம் காட்டப்படும் எதிர் வழக்குரையில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த இரண்டு கையொப்பமும் ஒன்றுக்கு ஒன்று சிறிது மாறி உள்ளது என்றால் சரிதான். கிரய ஒப்பந்த்தில் உள்ள கையெழுத்தை மறுக்க வேண்டும் என்று அது போல் மாறி மாறி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3. என் கணவர் ஏற்படுத்திய கிரய ஒப்பந்தம் மற்றும் அதன் பின் ஏற்பட்ட பணபரிவர்த்தனை அடிப்படையில் பாக்கி கிரய தொகையை பெற்று கொண்டு கிரயம் செய்து தரவேண்டும் என்றால் சரியல்ல. கிரய தர இல்லை என்றால் மாற்று பரிகாரமாக பெற்ற பணத்திற்கு வட்டியுடன் என் கணவர் திரும்பி செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>1ம் பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை</u>** – இல்லை

**மறுவிசாரணை** – இல்லை.

ஒப்பம்/-மாலதி

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– T.H. Mohammed Farooq,
மாவட்ட/அமர்வு நீதிபதி,
நாகப்பட்டினம்.